DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 56/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : சண்முகத்தாய் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 12.09.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 12th September 2025.

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது புளியம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எனக்கும், 1ம் எதிரி சமுத்திரக்கனிக்கும் கடந்த சுமார் 26 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. எங்களுக்கு 2 ஆண்மகன்கள் இருக்கிறார்கள். எனது கணவர் சரியாக வேலைக்கு செல்லமாட்டார். நான்தான் கூலி வேலை செய்து பிள்ளைகளை கவனித்து வந்தேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு எனது கணவர் 1ம் எதிரி சமுத்திரக்கனி கட்டிட வேலைக்கு சென்றார். அந்த சமயத்தில் 2ம் எதிரி காளீஸ்வரியும் கட்டிட வேலைக்கு சென்றுள்ளார். வேலைக்கு போன இடத்தில் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. எனது கணவர் 2ம் எதிரியிடம் அடிக்கடி போன் பேசிக்கொண்டிருந்ததால் நான் சத்தம் போட்டேன். அதனால் என் கணவர் என்னை சத்தம் போட்டு அடித்தார். எனது

கணவர் 2ம் எதிரி போட்டோவை மட்டும் எனது வீட்டில் வைத்திருந்தார். அதை பார்த்து எனது கணவரை சத்தம் போட்டேன். அப்போது என் கணவர் என்னை கையால் கன்னத்தில் அடித்துவிட்டார். அதன்பின்னர் நான் கோபித்துவிட்டு எனது அம்மா வீட்டிற்கு போய்விட்டேன். என் அம்மா வீட்டில் 5 மாதம் இருந்தேன். காரியாபட்டியில் உள்ள எனது அம்மா வீட்டில்வைத்து என்னை திரும்ப அழைப்பதற்காக வரும்போது 1ம் எதிரி எனது அம்மா வீட்டில் வைத்தும் என்னை சைக்கிளை தூக்கிபோட்டும், கம்பு வைத்தும் அடித்தார். செங்கலை தூக்கி எறிந்தார். எனது அம்மாவையும் நெஞ்சில் கையால் குத்தினார். எனது அம்மா காரியாப்பட்டி காவல்நிலையத்தில் நடந்த விபரத்தை கூறி போலீசாரை அழைத்து வந்தார். அதற்குள் எனது கணவர் ஓடிவிட்டார். கடந்த 10 வருடத்திற்கு முன்பு எனது கணவர் எதிரி காளீஸ்வரியை கோயம்புத்தூருக்கு அழைத்து சென்று அங்கு வெள்ளைப்பன்றி வளர்க்கும் பண்ணையில் வேலை செய்தனர். அந்த சமயத்தில் காளீஸ்வரி 8 மாத கர்ப்பமாக இருப்பதாக கேள்விப்பட்டேன். தற்போது எனது கணவருக்கும், காளீஸ்வரிக்கும் பெண்குழந்தை உள்ளதாக கேள்விப்பட்டேன். எனது கணவர் காளீஸ்வரியை கூப்பிட்டு செல்வதற்கு 2 நாட்களுக்கு முன்பு எனது மகனை சேலத்தில் உள்ள கல்லூரியில் படிப்பதற்காக சேர்த்திருந்தோம். ஆனால் அதன்பின்னர் 2 நாட்கள் கழித்து பணம் செலுத்த முடியாமல் போனபோது கல்லூரியில் மேற்கூறிய நடந்த விபரத்தை கூறும்போது அவர்கள் என்னை நம்புவதற்காக முதல்தகவல் அறிக்கை எதாவது பதிவு செய்யப்பட்டுள்ளதா அதை கொண்டு வாருங்கள் என்று கேட்டதால் நான் எனது கணவர் மீதும், காளீஸ்வரி மீதும் நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்தபுகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்குவிசாரணை இல்லை என்று கூறினார்.**